தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

பங்குனி 17, சுக்ல—திருவள்ளுவர் ஆண்டு 2021

1990, மார்ச் 31, சனிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் முனைவர் மு. தமிழ்க் குடிமகன் அவர்கள் தலைமையில் காலை 9.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்''.

மயில் இறகு ஏற்றிய வண்டியே ஆனாலும் அந்தப் பண்டமும் அளவோடு ஏற்றப்படாமல், அளவு கடந்து அதிகமாக ஏற்றப் படுமானால் அச்சு முறிந்து போகும்.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வினாக்கள் 2556 மற்றும் 3026 தள்ளி வைக்கப்படு கின்றன.

'நேரு' அறிவியல் நூல் வழங்கும் திட்டம்.

*1783—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அறிவியல் பாடங்களைப் படிக்கும் மாணவர்களை ஊக்குவிப்பதற்கென்று குடியரசுத் தலைவர் ஆட்சியில் தொடங் கப்பட்ட 'நேரு' அறிவியல் நூல் வழங்கும் திட்டத்தை மேலும் விரிவுபடுத்தும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவரவர்களே,

(அ) மேலும் விரிவுபடுத்தும் திட்டம் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.